# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2100 - 2018 නොවැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2018.11.30

*2100 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 220 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 221 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


219- B81472-353 (2018/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

பின்னிணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பிஹிலி எலேகெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின்கீழ், அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995.12.20 ஆந் திகதி அளிக்கப்பட்ட அளிப்பு இலக்கம் அநு/ராஜா/பி/1208 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 16 இல் வசிக்கும் வீரதுங்க ஆரச்சிகே பியசேன என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 3156 இன் கீழ் 2004.08.18 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்டரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 104 இன் கீழ், இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக யாதேனும் எதிர்வுகூறல் இருப்பின் 2018.11.23 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

### அட்டவணை

அநுராதபுரம் மாவட்டத்தின், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவு, விலச்சிய கோரளே, இல. 458 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வட்டார இலக்கம் 16 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க களத்தாளில் 16 ஆம் இலக்க இ.கொ.வ. இலக்கம் 11 துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 203 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 00 ஏக்கர் : 02 றூட் : 11 பேர்ச். விஸ்தீரணமுள்ளதும் மேட்டுக்காணி என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு:

வடக்கு : மேட்டுக்காணி இலக்கம் 204 ;
கிழக்கு : இலக்கம் 155 குடியேற்ற பாதை ஒதுக்கம் ;
தெற்கு : மேட்டுக்காணி இலக்கம் 202;
மேற்கு : அரச காணி இலக்கம் 201.

பிஹிலி எலேகெதர சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

2018, ஒகத்து 15.

11- 1371/1

பின்னிணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம் அநுராதபுர மாவட்டத்தின் கெகிராவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆர். ஏ. ஜீ. டபிள்யூ. ஏ. எஸ். பண்டார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1990, செத்தெம்பர் 05 ஆந் திகதி வழங்கப்பட்ட அனு/பி/22092 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரித்தாளியான நீக்கினியாவயில் வதியும் யூ. பி. டிங்கிரி அம்மாவிற்கு வழங்கப்பட்டு அநுராதபுர மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலே இலக்கம் ஸ்வர்ணபூமி 35/75 இன் கீழே அட்டவணையில் காட்டப்படும் காணிக்கு பதிலீடாக முன்வருவதற்கு சட்டரீதியாக உரிமை கோருவதற்கு எவரும் இல்லை என்பதால் அல்லது உரித்துடையவர் ஒருவர் இருப்பினும் அவர் பதிலீட்டாளராக முன்வருவதற்கு விருப்பம் தெரிவிக்காமையாலும் பதிலீட்டாளராக எவரும் முன்வருவதற்கு இல்லை என அறிக்கை கிடைக்கப்பட்டிருப்பதால் மேலே அளிப்புப் பத்திரத்தின் மேற்படி 104 ஆம் பிரிவின் கீழ், இரத்துச் செய்வதற்கு உரிய செயலொழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### அட்டவணை

வடமத்திய மாகாணத்தில், அநுராதபுர மாவட்டத்தில், கெக்கிராவ பிரதேச செயலகத்தில் தெற்கு கலாகம் கோரளையில் இலக்கம் 625 நீக்கினியாவ கிராம அலுவலர் பிரிவில் நீக்கினியாவ எனும் கிராமம் அமையப்பெற்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 04 கொண்ட அ. க. பி. 920 ........... கொண்ட பிரிவிடை செய்யப்பட்ட வரைபடத்திலே இலக்கம் 299 கொண்ட காணித்துண்டிற்கு என அமையப் பெற்றதும் விஸ்தீரணத்தில் 0.173 ஹெக்டயர் கொண்டதும் கீழே காட்டப்படும் வகையில் :

வடக்கு : காணித்துண்டு இல. 220, 228 மற்றும் 277;
கிழக்கு : காணித்துண்டு இல. 228 மற்றும் 277;
தெற்கு : காணித்துண்டு இல. 230, 231, 255 ;
மேற்கு : காணித்துண்டு இல. 230, 231 மற்றும் 220.

ஏ. எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
கெக்கிராவ.

11- 1371/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/57023.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல.: ALC/KG/D/2/32.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கேகாலை மாவட்டம், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிசோவில கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கலிகமுவ கர்மாந்தபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 610031 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 131 எனக் காட்டப்பட்டுள்ள 0.3726 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை மின்சார மாணி மூடிகள் தயாரிக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தறுமாறு கேட்டு ஸ்ரீ லங்கா எனஜிஸ் (பீவிரி) எல்ரீடீ விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 129, 130, 119;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 119, 132 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 132, 139;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 129.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (35) வருடங்கள் (2017.07.07 ஆம் திகதியிலிருந்து முன்னோக்கி 35 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகை.**- மாண்புமிகு அமைச்சர் அனுமதிக்கின்ற தினத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ் வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல் படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 5 மில்லியனைவிட (ரூபா 5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

**தவணைப்பணம்.**- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி மின்சாரமானி மூடிகள் தயாரிக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஏ. கலானி எம். தனசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, நவெம்பர் 30.

11-1177